## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை – 2017

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சூழல் மாசடைதல் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2018 மே 10 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1**

நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம், வருமானம் மற்றும் செலவினம் நியமனத்தினால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி எதிரீடு செய்யப்படலாகாது. எனினும், உலக கடல்சார் தினத்திற்கான மற்றும் சர்வதேச கடலோரத்தை சுத்தஞ்செய்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான வருமான மற்றும் செலவினங்கள் எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் தேறிய செலவினங்களாக முறையே ரூபா 1,991,069 மற்றும் 2,865,092 தொகைகள் மாத்திரம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2**

நியமத்தின் நோக்கங்களில் குறிப்பிடப்பட்ட பந்தியின் பிரகாரம், நிறுவகத்தின் செயற்பாடுகளுக்கு காசு உருவாக்கப்பட்ட மற்றும் காசு எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்ற முறையினை சுட்டிக்காட்டுவதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக, அட்டுறு அடிப்படையில் ரூபா 18,751,505 ஆன கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 25 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்று செய்யப்படும் பொழுது, கொள்வனவு திகதியிலுள்ளவாறான அதன் உண்மைப் பெறுமதியில் அது கணக்குகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். எனினும், காலி உப அலுவலகத்திற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வழங்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 32 சொத்துக்கள் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வுக்கு அதிகாரசபையினால் இனங்காணப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம், ரூபா 247,750 கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட 03 வகையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் செலவினமொன்றாக ஆய்வுகூட மூலப்பொருட்கள் மற்றும் ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்களின் கிரயத்தை பதிவழிப்பது அதிகாரசபையின் கொள்கையாகக் காணப்பட்ட போதிலும், 2018 சனவரியில் செலுத்துகைகளினை மேற்கொள்வதன் மூலம் பெறப்பட்ட ரூபா 1,764,198 பெறுமதியான உபகரணங்கள் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 மார்ச் 12 இல் கணக்காய்வினால் நடாத்தப்பட்ட பௌதீக இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம், எழுதுகருவிகள் இருப்புக்களின் பெறுமதி ரூபா 187,078 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) பிழையொன்றினை திருத்துகையில், ரூபா 3,055,941 பெறுமதியான தொட்டுணர முடியாத சொத்துக்கள் தளர்பாடம் மற்றும் உபகரணக் கணக்கிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 09 மோட்டார் வாகன விபத்துக்கள் மற்றும் அவற்றின் மீதான திருத்தச் செலவினத்திற்கு இழப்பீட்டுக் காப்புறுதியாக பெறப்பட்ட ரூபா 2,991,897 ஆன அதற்குச் சமமானவை தொகையொன்று, மீளாய்வாண்டின் போது கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2018 சனவரி மற்றும் பெப்ரவரியில் செலுத்தப்பட்ட மற்றும் 2018 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் பெறப்பட்ட ரூபா 7,076,006 பெறுமதியான சொத்துக்கள், மீளாய்வாண்டின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமையினால், அந்தக் கணக்கு மிகை கணிப்பீடொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

(உ) அந்நிய உயிரினங்களின் கட்டுப்பாடற்ற ஊடுறுவல் செயற்திட்டத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு பெறப்பட்ட ரூபா 316,975 பெறுமதியான சொத்துக்கள், கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

(ஊ) கொள்கைகளின் உருவாக்கத்திற்கு இயற்கையின் பாதுகாப்பிற்கான சர்வதேச தொழிற்சங்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மற்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பிற்கான தந்திரோபாய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,850,624 தொகையொன்று மீளாய்வாண்டின் செலவினமொன்றாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பயிற்சிப்பட்டறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 08 விளம்பரத்தட்டிகளுக்கு ஏற்பட்ட ரூபா 375,875 கூட்டுத்தொகையான செலுத்துகைகளின் உறுதிப்படுத்தலுக்கான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வருகை சான்றுப்பத்திரங்கள், கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் மாசடைதல் தவிர்ப்பு சட்டத்தின் 18.2 ஆம் பிரிவு | சட்டத்தின் பிரகாரம், ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தினால், அதிகாரசபையின் அதிகாரங்களினை நடைமுறைப்படுத்துகையில், கடமைகள் மற்றும் செயற்பாடுகளினை செயற்படுத்துகையில் மற்றும் மேற்கொள்கையில் ஏற்படவுள்ள செலவினங்கள் மாத்திரம் நிதியத்தினால் செலுத்த முடியும். எவ்வாறாயினும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஊழியர்கள் கடன் நிதியமொன்றிற்கு ரூபா 5,762,064 தொகையொன்று செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | சனாதிபதி செயலாளரின் 2015 செப்தெம்பர் 25 இன் எஸ்பி/எஸ்பீ/07/15 ஆம் இலக்க சுற்றறிக்கை | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளினை அடைந்து கொள்வதற்காக இழிந்தளவான கிரயமொன்றில் பொதுத்துறை நிகழ்வுகள், மாநாடுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளினை ஏற்பாடு செய்வதற்கு பொருத்தமான ஹோட்டல்கள் மற்றும் கருத்தரங்கு மண்டபங்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அதன்பிரகாரம், நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அதிகாரசபையினால் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 982,160 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ) | நட்டம் அல்லது சேதமொன்று ஏற்பட உடனடியாக, நட்டத்தின் விசாலம் மற்றும் காரணங்களினை அறிந்து கொள்வதற்கு மற்றும் பொறுப்புக்களினை நிர்ணயிப்பதற்கு விசாரணைகள் ஆரம்பித்து வைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 519,624 |

| | | |
|---|---|---|
| | | பெறுமதியான 04 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(4) | விபத்து திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு மதிப்பிடப்பட்ட நட்டத்தின் பெறுமதியுடன் அந்த விபரத்திற்கான பொறுப்புடைய நபர்களினை தீர்மானித்து முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 02 விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 211 | அனைத்து பொறுப்புக்களும் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற ரூபா 5,007,086 பெறுமதியான பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 156(7) | அனைத்து நிதிசார் கொடுக்கல் வாங்கல்களினையும் சிக்கனமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கையாளவேண்டிய போதிலும், உத்தியோகத்தர்களின் கைகளில் 16 சந்தர்ப்பங்களில் ரூபா 10,000 தொடக்கம் ரூபா 72,000 வீச்சில் பிடிகாசு காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. |
| (v) | நிதிப்பிரமாணம் 1642 | விபத்தொன்று ஏற்பட்ட உடனடியாக, அரசிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அது அறிக்கையிடப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 1645(அ) | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களினால் தொடர்ச்சியாக நாளாந்த ஓட்ட குறிப்பினை பரீட்சிப்பதற்கான ஏற்பாடுகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், பிராந்திய அலுவலகங்களில் அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கை | கட்டுநிதிகளினை அளிப்பதற்குப் பதிலாக, வங்கி முற்செலுத்தும் அட்டைகள் பயன்படுத்த முடியுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அவற்றின் மீது அதிகாரசபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2016 சனவரி 01 இன் 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை | அரச நிறுவனங்களின் அனைத்து சொத்துக்கள் தொடர்பில் கணனி முறைமைப்படுத்தப்பட்ட தரவுத்தளமொன்றின் பராமரிப்பு தேவையினை அரசு வலியுறுத்தியிருந்த போதிலும், ரூபா 200,736,374 பெறுமதியான சொத்துக்களுக்கு அதிகாரசபையினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,966,368 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 35,611,914 ஆன பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டிருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 32,645,546 பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 45,975,990 இனால் குறைவடைந்தமை மற்றும் சம்பளங்கள், ஊழியர்களின் நலன்கள் மற்றும் ஏனைய நடைமுறைச் செலவினம் ரூபா 15,659,134 இனால் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணங்களாகக் காணப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகள் பகுப்பாய்கையில் 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 1,814,711 பற்றாக்குறை மீளாய்வாண்டில் ரூபா 35,611,914 வரை அதிகரித்திருந்தது. ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற்கொண்ட பின்னர் அதிகாரசபையின் பங்களிப்பு தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பங்களிப்பு 19 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், காலந்தவறாத அடிப்படையில் அவற்றின் நோக்க அடைவுகளின் செயல்முன்னேற்றத்தின் பரீட்சிப்புக்கு முறைமையொன்றினை அதிகாரசபை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. மேலும், கடல்சார் சூழல் பாதுகாப்பின் தந்திரோபாய கொள்கை மீதான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் தயாரிப்பு, உணர்திறன்மிக்க சூழல் வரைபடங்களின் தயாரிப்பு, துறைமுகங்களின் உயிரியல் மதிப்பீடுகள் மீதான அறிக்கைகளின் முன்னிலைப்படுத்தல் மற்றும் அதிகாரசபை சட்டத்தின் திருத்தங்கள் போன்ற செயற்பாடுகள் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

அதிகாரசபையின் நோக்கங்களினை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிலாப அலுவலகத்துடன் தொடர்புடைய சிலாப குளத்தின் பிரதான முகத்துவாரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள குருசபடுவயிலுள்ள காணியொன்றின் மீது சிலாபம் நகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கற்ற குப்பை அகற்றலினால் ஏற்படுத்தப்பட்ட கடல்சார் மாசடைதலினை தடுப்பதற்கு மற்றும் அபராதங்களினை சுமத்துவதற்கு, சட்டத்திலுள்ள சட்டரீதியான அதிகாரங்களினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கையின் கடல்சார் சூழல் பாதுகாப்பிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்றுடன் தந்திரோபாயங்களுடனான கொள்கையொன்றின் தயாரிப்பு நோக்கத்திற்கு, அதனை 05 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யும் நோக்கொன்றுடன் 2017 ஆகஸ்ட் 15 இல் ரூபா 5,938,800 கிரயமொன்றில் உடன்படிக்கைகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், அதற்காக 2017 நவம்பர் அளவில் ரூபா 3,088,176 தொகையொன்றினை அதிகாரசபை செலுத்தியிருந்தது. அந்த செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றின் மீதான இறுதி அறிக்கை 2018 மார்ச் வரையிலும் அதிகாரசபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகள் தொடர்பில் உத்தேசித்துள்ள செயற்பாடுகளினை செயல்படுத்துவதற்கு ரூபா 3,604,039 தொகையொன்று ஒதுக்கப்பட்டதுடன், அந்த செயற்பாடுகளினை செயல்படுத்தாது பொதுத்திறைசேரிக்கு 2017 திசெம்பர் 28 இல் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை அலுவலக கட்டிடத்தின் குத்தகை காலப்பகுதி 2018 நவம்பரில் காலாவதியாகின்றதுடன் குறித்த காலப்பகுதி மேலும் நீடிப்புச் செய்யப்பட மாட்டாது என குத்தகைக்கு விட்டவர் அதிகாரசபைக்கு அறிவித்திருந்தார். ஆகையினால், 2018 ஆம் ஆண்டில் இந்தக் கட்டிடத்தின் அபிவிருத்திக்கு அதிகாரசபையினால் செலவிடப்பட்டு மூலதனமாக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 1,354,199 தொகையான நட்டக்கழிவு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து 2017 நவம்பரில் நன்கொடைகளாக பெறப்பட்ட ரூபா 177,075 பெறுமதியான கணனி உதிரிப்பாகங்களின் 05 வகைகள் சரக்கு இருப்புக்களில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் அவை களஞ்சியத்தில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 திசெம்பர் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நாளொன்றிற்கு ரூபா 750 விகிதமொன்றில் படியொன்றும் மற்றும் 2016 ஆம் ஆண்டிலிருந்து பட்டியலிடப்பட்ட பகல் இரவு வேலை மாற்றத்தின் பிரகாரம் படிகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், துறைமுகங்களில் கழிவினை சேகரிக்கும் வசதிகளினை வழங்குவதற்கு அனுப்பப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை அந்தப் படிகளின் செலுத்துகைக்காக ரூபா 1,951,550 மொத்தத் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(உ) பசுமை மீன்பிடி துறைமுகங்கள் செயற்திட்டத்தின் கீழ் பசுமை மீன்பிடி துறைமுகம் ஒன்றாக மிரிஸ்ஸ மீன்படித் துறைமுகத்தின் நிர்மாணத்திற்கு ரூபா 33,783,341 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் மொத்த செயற்திட்டத்தின் முழுமையான செயற்பாடுகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 சனவரி 25 வரையிலும் இந்த துறைமுகத்தினை இலங்கை மீன்படி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்தின் அதிகாரப் பரப்புக்களினுள் கழிவுகளைக் கொட்டுவதற்கு அனுமதி பெறப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய செயற்படாத நிறுவகங்கள் மீதான அறிக்கைகளினை வரவழைப்பதற்கு மற்றும் அதற்காக சட்ட பிரிவினால் தேவையான எதிர்கால நடவடிக்கைகளினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நுரைச்சோலை நிலக்கரி சக்தி ஆலையிலிருந்து வெளியிடப்படும் உயர் வெப்பநிலை நீரின் காரணமாக மற்றும் நிலக்கரியினை இறக்குகையில் கடலுக்குள் சிந்துவதன் காரணமாக சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் மாசடைதல் ஏற்பட்டது. இருப்பினும், அதனை இழிவளவாக்க அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வெரஹெனயிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி இயங்காமை காரணமாக மற்றும் கஹன்ட மோதர, தங்கல்லயிலுள்ள ஹோட்டலொன்றிலிருந்து கழிவகற்றல் காரணமாக ஏற்பட்ட சுற்றுச்சூழல் மாசடைதல் தொடர்பில் உடனடித் தீர்வுகளினை கண்டறிய முகாமைத்துவம் அதன் கவனத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் இல் தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு கோட்டை அலுவலகங்களில் ரூபா 378,123 செலவழிப்பதன் மூலம் பொருத்தப்பட்ட கெமரா முறைமை, ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு மேலாக விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) பெறுமதி கண்டுபிடிக்க முடியாததாகக் காணப்பட்ட லொறியொன்று கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து அதிகாரசபையினால் பெறப்பட்டதுடன் அதிகாரசபையினால் உரிமையைக் கொண்டுள்ள ரூபா 722,000 பெறுமதியுடைய டிங்கி படகு நான்கு வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு மேலாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மீளாய்வாண்டில் ரூபா 450,000 பெறுமதியான 03 கலங்கள் மீட்டர்களின் (Turbidity meters) கொள்ளவில், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தகுதியான விலை அனுதாரரினை தெரிவு செய்வதற்குப்பதிலாக இரண்டாவது விலைமனுதாரரினை தெரிவு செய்வதன் காரணமாக ரூபா 48,420 நட்டமொன்று ஏற்பட்டது.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் பதவியணியனரின் 22 பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது. அவற்றில், மூன்றாம் மற்றும் இரண்டாம் மாவட்டங்களில் காணப்படும் 12 பதவிகளிலுள்ள வெற்றிடம் அதிகாரசபையின் செயற்பாட்டு வினைத்திறனின் சரிவிற்கு தாக்கமளித்துள்ளது.

(ஆ) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டங்களிலுள்ள பதவிகளுக்கு மூன்று வருடங்களின் பூர்த்திக்கு முன்னர் வினைத்திறமை காண் பரீட்சைகள் நடாத்தப்படல் வேண்டும். எனினும், அவ்வாறான பரீட்சைகள் நடாத்தப்படாது அதிகாரசபையின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகள் அளிக்கப்பட்டிருந்தது.

(இ) புதிய ஆட்சேர்ப்புத் திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைதல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவகங்களும் செயற்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபை அதன் நோக்கெல்லையின் கீழ் வரும் செயற்பாடுகளினை அமுல்படுத்துகையில் அறிந்திருக்கவில்லை. ஆகையினால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், அந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளினை அடைவதற்கான மையப்புள்ளி மற்றும் இலக்குகளின் அடைவுகளினை அளவிடுவதற்கான குறியீடுகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் இரண்டு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் உள்ளகக் கணக்காய்வு அலகுக்கு இணைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளரொருவர் மாத்திரம் அந்த அலகிற்கு இணைக்கப்பட்டிருந்தனர். ஆகையினால், கணக்காய்வில் பரந்துபட்ட பகுதியொன்று மேவுகை செய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயல்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், அதிகாரசபையினால் யதார்த்தமான முறையொன்றில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நாளதுவரையாக்கப்பட்ட முறையொன்றில் கூட அது மீள்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் துறைமுக அலுவலகங்களில் பாதுகாப்பு கெமரா முறைமையொன்றின் (சீசீரீவீ) ஸ்தாபிப்பில், குறிப்புக்களின் கீழ் துணை பதிவுத்தட்டொன்று மேலதிக துணையொன்றாக இனங்காணப்பட்டதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவாக செயற்பட்ட குழுவின் பரிந்துரைகளினைப் பெற்றுக்கொள்ளாது பாதுகாப்பு கமராக்களின் கொள்வனவில் ரூபா 64,665 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**6.3 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் மாசடைதல் தடுப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2012 இன் 01 ஆம் இலக்க கட்டளைகளின் பிரகாரம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் தற்செயலான எண்ணெய் கழிவு பாதுகாப்பு திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போது காணப்படுகின்ற மீன்படி துறைமுகங்களில் கழிவு முகாமைத்துவத்திற்கு முறையானதொரு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில், கடலிலிருந்து நிலத்திற்கு 300 மீற்றர்கள் எல்லைக்குள் கழிவினை கடலுக்கு அகற்றும் வகையில் மலசலகூடத்தினால் உருவாக்கப்படும் கழிவின் அகற்றலுக்கான விளிப்புணர்வை உள்ளூர் சபைகளுக்கு மேற்கொள்வதற்கு மற்றும் மீள்சூழற்சி இன்றி கடலுக்கு அகற்றப்பட்ட கழிவு காரணமாக சுற்றுலாத்துறைக்கு ஏற்படுத்தப்பட்ட விசேட தாக்கங்களினை சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடுவதன் மூலம் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எனும் வகையில் அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிருவாகம் | ஆட்சேர்ப்புக்கள், பதவியுயர்வுகளினை அளித்தல் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளினை முறையான வகையொன்றினால் மேற்கொள்ள தவறியமை |
| (ஆ) | செயற்திட்டங்களின் நிறைவேற்றுதல் | உரிய திகதியில் செயற்திட்டங்களினை பூர்த்தி செய்வதற்கு மற்றும் செயற்திட்டம் தொடர்பிலான இறுதி அவதானிப்புக்கள் மற்றும் கணக்குகளினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (இ) | திட்டங்களினை அமுல்படுத்தல் | திட்டங்களின் முறையற்ற அமுல்படுத்தல்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளினை எடுக்கத் தவறியமை. |
| (ஈ) | நிதிசார் கட்டுப்பாடு | நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்துகையில் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பான விடயம் கவனஞ் செலுத்தப்படாததன் காரணமாக மிகைச் செலவீனம் ஏற்படுதல். |

| | | |
|---|---|---|
| (உ) | இருப்புக் கட்டுப்பாடு | களஞ்சியங்களினால் பொருட்களைப் பெறுவதற்கு மற்றும் அவற்றை விநியோகிப்பதற்கு தவறியமை மற்றும் இருப்பு பதிவேடுகளினை நாளதுவரையாக்குவதற்கு தவறியமை |
| (ஊ) | மோட்டார் வாகனங்கள் மீதான கட்டுப்பாடு கட்டுப்பாடு | பதிவு புத்தகம், ஓட்ட அட்டவணை மற்றும் சான்றுறுதிப்படுத்தல்களினை நாளதுவரையாக்குவதற்கு தவறியமை மற்றும் மோட்டார் வாகன விபத்துக்கள் மீதான ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்கு மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியமை. |